# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2310/72 - 2022 දෙසැම්බර් මස 17 වැනි සෙනසුරාදා - 2022.12.17

2310/72 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும்

**ஊவா மாகாண மாகாண சபை**

ஊவா மாகாண ஆளுநரினால் செய்யப்படும் நியமனங்கள்

1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைச் சட்டத்தின் 32(1) ஆம் பிரிவின் கீழ் ஊவா மாகாண ஆளுநர் ஏ. ஜே. எம். முஸம்மில் ஆகிய நான், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள நியமனங்களைச் செய்துள்ளேன் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

1. இலங்கை நிர்வாக சேவையின் தரம் III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. டி. எம். கே. எஸ். பீ. திசாநாயக அவர்கள், தனது நிரந்தரப் பதவியின் பணிகளுக்கு மேலதிகமாக, உடனடியாக செயற்படும் வகையில் 2022.09.14 ஆந் திகதி முதல் ஊவா மாகாண விளையாட்டுப் பணிப்பாளராக பதில் கடமையாற்றுவதற்காக.

2. இலங்கை நிர்வாக சேவையின் தரம் II ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. பீ. எம். கே. ஜீ. பண்டார அவர்கள், 2022.10.03 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில் ஊவா மாகாண சுகாதாரம், சுதேச வைத்தியம், நன்நடத்தையும் சிறுவர் பாதுகாப்பும், மகளிர் விவகாரம் மற்றும் சமூக நலன்புரி விவகாரம் தொடர்பான அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் பதவியில் முழுநேர பதில் கடமையாற்றுவதற்காக.

3. இலங்கை நிர்வாக சேவையின் தரம் II ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திருமதி என். எல். எஸ். பியுமிலா அவர்கள், 2022.10.03 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில் ஊவா மாகாண சமூக சேவைப் பணிப்பாளராக கடமையாற்றுவதற்காக.


1A - PG 6076 — 31 (2022/12)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

4. இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. எச். எம். நந்தசேன அவர்கள், 2022.11.01 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில் ஊவா மாகாண நிதியும் திட்டமிடலும், சட்டமும் சமாதானமும், கல்வி, மாகாண உள்ளூராட்சி, காணி, மின்சக்தியும் வலுசக்தியும், நிர்மாணத்துறை, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான அமைச்சின் செயலாளராக கடமையாற்றுவதற்காக.

5. இலங்கை நிர்வாக சேவையின் தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திருமதி ஆர். எச். சீ. பிரியன்தி அவர்கள், 2022.11.01 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில் பிரதித் தலைமைச் செயலாளராக (ஆளணி மற்றும் பயிற்சி) பதில் கடமையாற்றுவதற்காக.

6. இலங்கை நிர்வாக சேவையின் தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. எச். எம். ஜே. ஹேரத் அவர்கள், தனது நிரந்தரப் பதவியின் பணிகளுக்கு மேலதிகமாக, 2022.11.22 ஆந் திகதி முதல் செயற்படும் வகையில் பிரதித் தலைமைச் செயலாளராக (ஆளணி மற்றும் பயிற்சி) கடமையாற்றுவதற்காக.

7. இலங்கை நிர்வாக சேவையின் தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திருமதி ஆர். எச். சீ. பிரியன்தி அவர்கள், தனது நிரந்தரப் பதவியின் பணிகளுக்கு மேலதிகமாக, உடனடியாக செயற்படும் வகையில் 2022.11.30 ஆந் திகதி முதல் ஊவா மாகாண ஆளுநரின் செயலாளராக பதில் கடமையாற்றுவதற்காக.

8. இலங்கை நிர்வாக சேவையின் தரம் I ஐச் சேர்ந்த உத்தியோகத்தர் திரு. எம். எம். விஜேநாயக அவர்கள், உடனடியாக செயற்படும் வகையில் 2022.11.30 ஆந் திகதி முதல் ஊவா மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக கடமையாற்ற.

**ஏ. ஜே. எம். முஸம்மில்,**
ஊவா மாகாண ஆளுநர்.

ஆளுநர் அலுவலகம்,
ஊவா மாகாணம்,
2022, திசெம்பர் 13.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.